# தேசியம்

THESIYAM ජේසියම්

www.thesiyamnews.com



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE, NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE +94 77 722 2259



குரல் - 58 | 17.05.2023 (புதன்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00


## முள்ளிவாய்க்கால் படுகொலையாளிகளை குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும் - சிவாஜிலிங்கம்



முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என தமிழ் தேசிய கட்சி செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பக்கம் 5

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு அனைவரும் அணிதிரள வேண்டும்! – மாவை அழைப்பு

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனைவரும் அணிதிரள வேண்டும் என இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா அழைப்பு விடுத்துள்ளார்.

மே 18 முள்ளிவாய்கால் நினைவேந்தல் தொடர்பில அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் இதனை தெரிவித்தார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



பக்கம் 5

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அரசியல் மேடையாக்க வேண்டாம் – பகிரங்கமாக கோரிக்கை



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை அரசியல்வாதிகள் அரசியல் மேடையாக்க வேண்டாம் என போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர் விநாயகமூர்த்தி

## வட– கிழக்கில் சட்டம் மற்றும் ஒழுங்குகள் மீறப்படுகின்றது: ஈ.பி.ஆர்.எல்.எப் சுரேஸ் பிரேமச்சந்திரன்



பக்கம் 5

வடக்கு மற்றும் கிழக்கில் பல்வேறுபட்ட சந்தர்பங்களில் சட்டம் மற்றும் ஒழுங்குகள் மீறப்படு சிங்கள தரப்பினர்கள் தாங்கள் விரும்பியவாறு செயற்படுகின்றனர் என ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

## விளக்கேற்றலோ..! கஞ்சி வழங்கலோ..! எதுவும் தேவையில்லை குமுறும் சிங்கள இனவாத எம்.பி



பக்கம் 5

"போரில் இறந்த உறவுகளை வீட்டுக்குள் நினைவுகூரலாம். ஊர்திப்பவனி, கஞ்சி வழங்கல், விளக்கேற்றல் எதுவும் தேவையில்லை" என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.



பக்கம் 5

# மரம் கருகி கரிக்கட்டையாக விழுவதைப் போன்று மக்கள் இறந்தனர்! முன்னாள் போராளியின் குற்றச்சாட்டு

## நினைவேந்தல் காலங்களில் விடுதலைப் புலிகளையும் நினைவேந்துவதால்தான் சிக்கல்: மகிந்த ராஜபக்ச



பக்கம் 3

போரில் உயிர் நீத்த உங்கள் உறவுகளை, உறவுகள் என்ற ரீதியில் நீங்கள் தனித்தனியே நினைவேந்துங்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில், போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு இலங்கையில் எந்த அரசாங்கமும் தடைவிதிக்கவில்லை.

## வடக்கு பகுதியில் சீன வீட்டுத் திட்டம்: யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் விடுத்துள்ள கோரிக்கை




பக்கம் 3

வடக்கு பகுதிக்கு சீனாவினால் வழங்கப்படவுள்ள வீட்டுத் திட்டம் அரசியல் நோக்கங்களை அடைவதற்கான திட்டங்களாக அமையக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிரபாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், வடக்கு பகுதி கடற்தொழிலாளர்களுக்கு வீடு அமைப்பு மற்றும் ஏனைய அபிவிருத்திகளுக்காகச் சீன அரசாங்கம் பாரிய நிதி ஒன்றை

## தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் பேணப்பட்ட பௌத்த சின்னங்கள்

### சிவகுரு ஆதின முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள்

தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் காலத்திலும் பௌத்த சின்னங்கள் பேணப்பட்டன என்று சிவகுரு ஆதின முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.



பக்கம் 3

தேசியம் THESIYAM www.thesiyamnews.com



# காணிக் கட்டளைச் சட்டத் திருத்தமும் வகுக்கப்படும் வியூகமும்!

அ.நிக்ஸன்

**2018 இல் கோப் குழு முன்வைத்த பரிந்துரைகளுக்கு ஏற்பக் கடந்த இரண்டு வருடங்களாக இலங்கைத்தீவின் அனைத்து மாகாணங்களிலும் உள்ள காணிகள் பற்றிய விபரங்கள் பெறப்பட்டாலும் வடக்குக் கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களின் காணிகள் பற்றிய விபரங்களே அதிகமாகப் பெறப்பட்டுத் தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஜே.ஆர் வகுத்த சூழ்ச்சி வகிபாகத்தின் நீட்சியாகக் கையாளப்படும் அரசியல் உத்தி.**

வடக்குக் கிழக்குத் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் உள்ள காணிகளைக் கொழும்பை மையமாகக் கொண்ட இலங்கை ஒற்றையாட்சி அரசின் சில திணைக்களங்கள் அபகரித்து வரும் சூழலில், காணிக் கட்டளைச் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அதிபர் ரணில் விக்ரமசிங்க கடந்த புதன்கிழமை உத்தரவிட்டிருக்கிறார்.

அதுவும் தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்கு முதல் நாள் இந்த உத்தரவை ரணில் பிறப்பித்திருக்கிறார். தமிழர் பிரதேசங்களில் பௌத்த மயமாக்கல் நாளுக்கு நாள் வெவ்வேறு வடிவங்களில் அரசியல் யாப்புச் சட்டங்களுக்கு மாறாகவும், சட்டங் ~~சட்டங்~~களுக்கு அமைவானது என்று காண்பிக்கப் போலியாகத் தயாரிக்கப்பட்ட காணி உறுதிகளுடனும் பௌத்த மயமாக்கல் வேகமடைந்துள்ளது.

1988 இல் இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் உள்ள காணி - காவல்துறை அதிகாரங்கள் குறிப்பாகக் காணி அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கும் நிலையில் காணித் திருத்தக் கட்டளைச் சட்டம் குறித்து ரணில் பரிந்துரைத்திருக்கிறார். 2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் போதும் காணித் திருத்தக் கட்டளைச் சட்டம் குறித்து அப்போது பிரதமராக இருந்த ரணில் துரித நடவடிக்கைகளை எடுதிருந்தார்.

### சிங்கள குடியேற்றங்கள்

1983 இல் போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் குறிப்பாக 1948 இல் இருந்து அரச அதிகாரிகளின் ஏற்பாட்டில் காவல்துறையின் ஒத்துழைப்புடன் காணிகள் அபகரிக்கப்பட்டுச் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இடையில் நடைபெற்ற முப்பது வருட போரினால் குடியேற்றங்கள் தடைப்பட்டிருந்தன. அல்லது தாமதமடைந்திருந்தன என்று கூறலாம். போரை இல்லாதொழித்த மகிந்த ராஜபக்ச, 2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் இராணுவத்தைப் பயன்படுத்தியே காணிகளை அபகரித்தார்.



ஆனால் கொழும்மை மையமாகக் கொண்ட தொல்பொருள் திணைக்களம், வன இலாகத் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகிய அரச நிறுவனங்கள் மூலம் தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் உத்தியை ரணில் 2015 இல் பிரதமராக இருந்த போது அறிமுகப்படுத்தியிருந்தார். இலங்கை ஒற்றையாட்சிச் சட்டத்தின் கிழ் காணிகளை அபகரிக்கும் இத் திணைக்களங்களுக்கு காவல்துறையினர் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். இராணுவமும் ஆதரவு வழங்கியிருந்தது.

2020 இல் அதிபராக பதவியேற்ற கோட்டாபய ராஜபக்சவும் ரணில் கையாண்ட அதே உத்தியைத்தான் தொடர்ந்தார். எனினும் 2022 யூலை மாதம் அதிபராக பதவியேற்ற ரணில், காணி அபகரிப்புகளை முழுமையாகச் சட்டரீதியாக்கும் ஏற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளார். நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு காணிக் கட்டளைச் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ள ரணில், பணிகளை துரிதப்படுத்துவதற்கு தகுதியான குழுவொன்றை நியமிக்குமாறும் அறிவுரை வழங்கியுள்ளார்.

### ரணிலின் கலந்துரையாடல்

காணி முகாமைத்துவம் குறித்து நிறுவனங்களின் சட்ட ஏற்பாடுகளில் திருத்தம் மேற்



கொள்வது மற்றும் புதிய சரத்துகளை திருத்துவது உள்ளீடு செய்வது குறித்து அதிபர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போது ரணில் வலியுறுத்தியிருக்கிறார். காணிப் பயன்பாடுகள் தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் கொண்டுவரப்பட்டுள்ள சட்டத் திருத்தங்கள் நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பொருத்தமற்றதாக காணப்படுவதாகவும் ரணில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

> **இலங்கைத்தீவின் அனைத்து மாகாணங்களிலும் உள்ள காணிகள் பற்றிய விபரங்கள் பெறப்பட்டாலும் வடக்குக் கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களின் காணிகள் பற்றிய விப~~ர ங்~~ரங்களே அதிகமாகப் பெறப்பட்டுத் தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.**

அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குக் காணிகளை பெறுவதில் காணப்படுகின்ற சிக்கல்களை நீக்கிப் புதிய தேசிய காணிக் கொள்கை ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவே ரணில் அதிகமாகப் பிரஸ்தாபித்திருக்கிறார். காணி ஆணைக்குழுவின் ஊடாக மாகாண சபைகளின் காணிகள் தொடர்பான பிரச்சினைகளை நிவர்த்திக்குமாறும், கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள காணி உரிமையாளர்களின் விபரங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள காணிகள், பயன்படுத்தப்படாமல் இருக்கும் காணிகள் தொடர்பாகக் கண்டறிந்து பிரதேச செயலாளர் மட்டத்தில் அறிக்கையொன்றை தயாரிக்குமாறும் ரணில் அதிகாரிகளுக்கு உத்திரவுமிட்டுள்ளார்.

ஆனால் இலங்கைத்தேசிய காணி ஆணைக்குழு கடந்த முப்பத்தைந்து வருடங்களாக உருவாக்கப்படவில்லை என்பதுதான் இங்கே வேடிக்கை. இந்த நிலையிலேயே புதிய தேசிய காணிக் கொள்கை ஒன்றை வகுக்குமாறு ரணில் உத்திரவிட்டிருக்கிறார். காணிச் சட்டத் திருத்தம் பற்றித் தேசிய கொள்கை ஒன்றை வகுக்க வேண்டுமானால், வடக்குக் கிழக்கு மாகாண பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை எதுவும் இல்லாமல் ரணிலின் உத்தரவு அமைந்துள்ளது. அல்லது பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாணங்களை உள்ளடக்கிய தேசிய காணி ஆணைக்குழுவை உருவாக்க வேண்டும்.

### காணி ஆணைக்குழு

ஆனால் அவ்வாறான திட்டங்கள் எதுவுமேயில்லாமல் வெறுமனே தேசிய காணிக் கொள்




கை ஒன்றை வகுக்குமாறு முற்றிலும் சிங்கள அதிகாரிகளைக் கொண்ட குழுவிடம் உத்திரவிட்டுள்ள நிலையில், வியாழக்கிழமை தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் ரணில் பேச்சு நடத்தியிருக்கிறார். இனப்பிரச்சினை தீர்வுக்கான ஏற்பாடுகள் பற்றியே பேச்சு இடம்பெற்றதாகத் தமிழரசுக் கட்சி கூறினாலும், காணித் திருத்தச் சட்ட ஏற்பாடுகள் இந்தப் பேச்சுத் தொடர்பான சந்தேகங்களை எழுப்பியுள்ளன. மாகாணங்களுக்குரிய காணி அதிகாரங்களை மையப்படுத்தி இலங்கைத் தேசிய காணி ஆணைக்குழு ஒன்றை பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கலாம்.

ஆனால் இதுவரையும் மாகாணங்களை உள்ளடக்கிய இலங்கைத் தேசிய காணி ஆணைக்குழு மற்றும் காவல்துறை ஆணைக் குழுக்கள் உருவாக்கப்படாமல் கொழும்பை மையமாகக் கொண்ட சிங்கள அதிகாரிகள் அங்கம் வகிக்கும் அரச திணைக்களங்களிடம் பொறுப்புகள் பகிரப்படுள்ளன. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் சட்டத்தைப் புதுப்பித்து அதன் செயற்பாடுகளை மறுசீரமைப்பதற்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிடம் (கோப் குழு) 2018 இல் ரணில் பிரதமராக இருந்த போது உத்திரவிட்டிருந்தார்.

இந்த முயற்சியை 2020 இல் அதிபராக இருந்த கோட்டாபய ராஜபக்ச தொடர்ந்தார். 2020ஆம் ஆண்டுக்கான காணிச் சீர்திருத்த ஆணைக்குழு குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் சமகாலச் செயலாற்றுகை குறித்து ஆராய கோப் குழு தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் அப்போது கூட்டம் ஒன்றும் நடைபெற்றிருந்தது. பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டதுடன், இந்தப் பரிந்துரைகள் நிறைவேற்றப்படுவது பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்குக் காணி சீர்திருத்த ஆணைக் குழுவை அடுத்தடுத்துக் கூட்ட வேண்டிய அவசியம் குறித்தும் யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

### கோப் குழுவின் பரிந்துரை

இந்த ஆணைக்குழு காணிகளைக் கையகப்படுத்தும்போது காணப்படும் பிரச்சினைகள் கோப் குழுவினால் கவனம் செலுத்தப்பட்டதுடன், இதற்கமைய கடந்த இருபது வருடங்களில் காணி கையகப்படுத்தல் தொடர்பான விரிவான தகவல்கள் அடங்கிய அறிக்கையும் 2018 இல் சமர்ப்பிக்கப்பட்டிந்தது. அது மாத்திரமல்ல காணிகளை அடையாளம் காணுதல் மற்றும் பெறுமதியை மதிப்பீடு செய்தல் என்பவற்றுக்காக விசேட செயலணியொன்று அமைக்கப்பட வேண்டுமெனக் கோப் குழு




அப்போது பரிந்துரை வழங்கியிருந்தது. குறிப்பாக வடக்குக் கிழக்கில் பௌத்த குருமார் விகாரைகளை அமைக்கும்போது ஏற்படுகின்ற தடைகள் குறித்தும், பௌத்த குருமார் அடையாளப்படுத்தியுள்ள காணிகள் பற்றியும் உரையாடப்பட்டிருந்தன. ஆகவே 2018 இல் கோப் குழு முன்வைத்த பரிந்துரைகளுக்கு ஏற்பக் கடந்த இரண்டு வருடங்களாக இலங்கைத்தீவின் அனைத்து மாகாணங்களிலும் உள்ள காணிகள் பற்றிய விபரங்கள் பெறப்பட்டாலும் வடக்குக் கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களின் காணிகள் பற்றிய விபரங்களே அதிகமாகப் பெறப்பட்டுத் தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

இப்பின்னணியிலேயே காணிச் சட்டங்களைத் திருத்துவது தொடர்பாக ரணில் அதிகாரிகளுடன் உரையாடியிருக்கிறார் எனத் தகவல்கள் கசிந்துள்ளன. பத்துலட்சம் காணித் துண்டுகளைப் பகிர்ந்தளிக்கும் வேலைத் திட்டம் தொடர்பாகவும் காணி பகிர்ந்தளிப்பு தொடர்பான தேசிய கொள்கைக்குள் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளை உள்ளடக்கித் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள கோப் குழு அப்போது பரிந்துரைத்தது. குறிப்பாக 1972 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் சட்டத்தை தற்போதைய காலத்துக்கு ஏற்ற வகையில் புதுப்பிக்க

வேண்டும் என 2018 கோப் குழு வழங்கிய பரிந்துரைகளின் பிரகாரமே ரணில் சென்ற புதன்கிழமை காணிச் சட்டத் திருத்தங்கள் குறித்து விளக்கமளித்திருக்கிறார்.

அதுவும் வடக்குக் கிழக்கில் தமிழர்களின் பாரம்பரிய காணிகள் அபகரிக்கப்பட்டுச் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் புத்தர் சிலை வைத்தல், பௌத்த விகாரைகள் கட்டுதல் போன்ற செயற்பாடுகள் தீவிரமடைந்து வரும் நிலையில், காணிச் சட்டங்கள் பற்றிய திருத்தங்கள் தொடர்பாக ரணில் ஆராய்ந்திருக்கிறார். பௌத்த மயமாக்கலைத் தடுப்பதற்குரிய எந்த ஒரு ஏற்பாடுகளும் இன்றி காணிச் சட்டங்கள் பற்றிய கூட்டத்தை ரணில் நடத்தியமை குறித்துத் தமிழ்த்தரப்பு எந்தவிதமான கருத்துக்களையும் வெளியிடவில்லை.

### 13ஆம் திருத்தம் தீர்வல்ல

வடக்குக் கிழக்கில் உள்ள காணிகள் பற்றியும் அபிவிருத்தி என்ற போர்வையில் கொழு




ம்மை மையமாகக் கொண்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடம் கைளிப்பது பற்றியும் இக் கூட்டத்தில் பேசப்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன. இவ்வாறான சூழலிலேதான், இரண்டு நாட்கள் தொடர்ச்சியாகத் தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் ரணில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார். ஆனால் காணிகள் பற்றியோ குறிப்பாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள இலங்கைத் தேசிய காணி ஆணைக் குழுவை நியமிப்பது குறித்தோ பேசப்பட்டதாகத் தெரியவில்லை.

புதின்மூன்றாவது திருத்தச் சட்டம் ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வல்ல என்பது பட்டவர்த்தனமாக வெளிப்பட்ட தகவல். ஆனாலும் ஒற்றையாட்சிச் சட்டத்தில் உள்ள மாகாணங்களுக்குரிய காணி அதிகாரங்கள்கூட கொழும்பில் உள்ள சிங்கள அதிகாரிகளை மையப்படுத்திய தொல்பொருள் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வன இலாகாத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆகவே தமிழர் நிலங்களில் காணி அபகரிப்புகள் சட்ட ரீதியாக அதாவது தொல்பொருள் திணைக்களத்துக்குரிய பௌத்த மரபுரிமை சார்ந்தது என்ற அங்கீகாரத்தை ரணில் விக்கிரமசிங்கக கன கச்சிதமாக உறுதிப்படுத்தியுள்ள நிலையில், தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் பேச்சு நடத்தியமைதான் இங்கே வேடிக்கை.

தமிழர் பிரதேசங்களில் நிலங்களை அபகரித்துப் பௌத்த தேசிய மரபுரிமைகளைச் செயற்கையாக உருவாக்கிச் சிங்களப் பிரதிநிதித்துவத்தையும் சமப்படுத்தினால் வடக்குக் கிழக்கில் பதின்மூன்றை நடைமுறைப்படுத்தச் சிங்கள ஆட்சியாளர்களுக்குப் பிரச்சினை இருக்காது. அது இந்தியாவுக்கும் ஏற்புடையதாக இருக்கும். குறிப்பாகப் பதின்மூன்று என்ற தனது முதுகெலும்பு தொடர்பாக இந்தியா கடும் அழுத்தங்களைக் கொடுத்தாலும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு அதனைச் செயற்படுத்தப் பிரச்சினை இருக்காது.

ஏனைய மாகாண சபைகள் போன்று, தமிழ். முஸ்லிம் மற்றும் சிங்களம் கலந்த மாகாண சபையாக வடக்குக் கிழக்கு மாகாண சபைகளும் இயங்கும். "தமிழ்த் தேசியம்" "தமிழர் தாயகம்" என்ற கோட்பாடு இல்லாமல் போகும். எனவே ஜே.ஆர் அன்று நினைத்த காரியத்தை, ரணில் இன்று ஒழுங்கு முறையாகச் செய்து முடிக்கிறார். 2009 இல் மகிந்த போரை இல்லாதொழித்தார். 2023 இல் ரணில் அரசியல் ரீதியாகத் தமிழ்த்தேசியத்தை நீக்கம் செய்கிறார். அதாவது "தமிழ்த் தேசியம்" - "தமிழர் தாயகம்" என்பதன் முதுகெலும்பான காணி - நிலத்தைத் துண்டாக்கி இலங்கை ஒற்றையாட்சி முறைமைக்குள் ஒருங்கிணைக்க ரணில் சிங்கள அதிகாரிகளுடன் புதன்கிழமை பேச்சு நடத்தியிருக்கிறார் என்பதே உண்மை.

### காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழு

மறுபுறத்தில் "தமிழ்த்தேசியம்" - "தமிழர் தாயகம்" என்பதை ஒற்றையாட்சிக்குள் விரைவாகக் கரைக்க வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் ரணில் உரையாடியிருக்கிறார். ஆகவே பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் காணி உரிமைகள் வழங்கப்பட்டிருந்தாலும், காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரங்கள் 1972 இல் இருந்து கொழும்மை மையப்படுத்தி இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வரும் காரண - காரியத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. அதாவது சிங்களச் சூழ்ச்சிக் கருத்தியல் தற்போது பகிரங்கப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணி



அதிகாரங்களை காணிச் சீர்திருத்த ஆணைக்குழு கட்டுப்படுத்தும் வல்லமை கொண்டது. இந்த வல்லமையை இழக்கக்கூடாது என்ற கருத்தின் அடிப்படையில் இலங்கைத் தேசிய காணி ஆணைக்குழுவை அமைக்கச் சிங்கள ஆட்சியாளர்கள் விரும்பில்லை என்பதும் கண்கூடு. ஆகவே 2009 மே மாதத்தின் பின்னரான சூழலில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சியே நிரந்த அரசியல் தீர்வு என்ற ஆழமான கருத்தை ஒரு வார்த்தையில் நிறுவாமல் பல கட்சிகளாகவும், பல குரல்களாகவும் தமிழ்த்தரப்பு சிதறுண்டு கிடப்பதை, ரணில் தனது அரசியலுக்குச் சாதமாகவல்ல "இலங்கைத் தேசியம்" என்ற கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்த மிக நுட்பமாகப் பயன்படுத்துகிறார்.

---

## நினைவேந்தல் காலங்களில்...

நினைவேந்தல் காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் நினைவேந்துவதால் தான் சிக்கல் நிலை ஏற்படுகின்றது. தடைகளும் வருகின்றன.

தமிழ் மக்களிடம் நான் கூறிக்கொள்ள விரும்புவது போரில் உயிர் நீத்த உங்கள் உறவுகளை, உறவுகள் என்ற ரீதியில் நீங்கள் தனித்தனியே நினைவேந்துங்கள்.

அதைவிடுத்து புலிப்பயங்கரவாதிகளை நினைவேந்தும் நிகழ்ச்சி நிரலுக்குள் நீங்களும் பங்கேற்று உங்கள் உறவுகளை நினைவேந்துவதைத் தவறவிடாதீர்கள் என தெரிவித்துள்ளார்.

## வடக்கு பகுதியில் சீன வீட்டுத்...

வழங்கவுள்ளதாகக் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் இடம் பெற்ற யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

சீன அரசாங்கம் உதவி செய்வதில் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால், வடபகுதியில் அரசியல் நோக்கங்களுக்களை அடைவதற்காகத் திட்டங்களை வழங்குவது எமது மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் வடக்கு மாகாணத்துக்கு வழங்கப்பட்ட சுமார் 2,500 க்கும் மேற்பட்ட வீடுத் திட்டங்கள் முழுமைப்படுத்தப்படாமல் கிடப்பில் இருக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்திய தற்போதைய அரசாங்கம் தம்மிடம் நிதி இல்லை எனக் காரணம் கூறும் நிலையில், மழைக் காலங்களில் குறித்த வீட்டில் வசிப்போர் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

ஆனால், தற்போது சீனா வீட்டுத் திட்டத்தை வழங்கப்போகிறது என அமைச்சர் கூறும் நிலையில், ஏற்கனவே வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தை பூரணப்படுத்தாதவர்களுக்கு ஏன் சீனாவின் நிதியை வழங்க முடியாது.

வடக்கு பகுதி கடற்கரையோரங்களைச் சீனா இலக்கு வைத்து அயல் நாடான இந்தியாவுக்கு சவால் விடுவதற்கு எமது மக்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தக் கூடாது.

ஆகவே, வடக்கு பகுதியில் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு முழுமை பெறாத விவரங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்று அவர்களின் வீட்டுக்களை முழுமைப்படுத்த உதவ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முள்ளிவாய்க்கால் நினைவேந்...

லங்காசிறியின் ஊடறுப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில், "வடக்கு - கிழக்கில் இப்போது ஆக்கிரமிப்பு செய்யப்படும் பகுதிகளில் பௌத்தர்கள் இல்லை.

இலங்கை அரசாங்கத்தின் இயந்திரங்களாகிய சிங்கள இராணுவத்தினர், சிங்கள பொலிஸார் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் உட்பட பல அதிகாரிகள் அங்கிருந்து வழிபடுவதற்காக பௌத்த கட்டுமானங்கள் உருவாக்கபடுகின்றதே தவிர பூர்வீகமாக சிங்கள பௌத்தர்கள் வாழ்கின்ற இடங்கள் என்று எதுவுமே கிடையாது.

வடக்கு-கிழக்கில் பூர்வீகமாக பௌத்தர்கள் வாழ்ந்தால், அங்கு வழிபாட்டுக்காக தாங்களாகவே விரும்பி சட்ட திட்டங்களுக்கமைய விகாரை கட்டி வழிபடலாம். அதற்கு நாங்கள் எந்த விதத்திலும் ஆட்ச்சேபனை தெரிவிக்க போவதில்லை.

தென்னிலங்கையில் கோவில் உள்ளது என்றொரு கருத்து உள்ளது. அங்கு தமிழ் மக்கள் செறிந்து வாழ்கிறார்கள்.அவர்கள் சட்டத்திட்டத்திற்குட்பட்டு ஆலயங்களை அமைத்துள்ளனர். அதன் நோக்கம் வழிபாடே தவிர ஆக்கிரமிப்பு அடாவடித்தானம் கிடையாது."என கூறியுள்ளார்.






# கோட்டாபய கொலை சதி:
## தமிழ் அரசியல் கைதி விடுதலை..!



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டியதாக சந்தேகத்தில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்று கொழும்பு மேல்நீதிமன்றால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2006ஆம் ஆண்டு கொழும்பு - பித்தளை சந்தியில், அப்போதைய பாதுகாப்பு செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷவை இலக்கு வைத்து தற்கொலை குண்டு தாக்குதல் நடத்தப்பட்டிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் கடந்த 15 ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிவலிங்கம் ஆரூரன் நேற்றைய தினம் கொழும்பு மேல் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டார்.

# யாழில் சிறுவர்களை கடத்த முயன்ற நபர்
## தொடர்பில் விசாரணையில் வெளியான பரபரப்புத் தகவல்



யாழ்ப்பாணம் நாவாந்துறையில் சிறுவர்களை கடத்த முயன்றார் என அப்பகுதி மக்களால் நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் காணாமல்போனமை தொடர்பாக ஏற்கனவே குடும்பத்தினரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் நாவாந்துறையில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை சிறுவர்களை கடத்த முயன்றார் என அப்பகுதி மக்களால் நபர் ஒருவர் மடக்கி பிடிக்கப்பட்டு யாழ்ப்பாண பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

மக்களால் ஒப்படைக்கப்பட்ட நபரிடம் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் குறித்த விடயம் தெரியவந்துள்ளது.

அண்மைக் காலமாக சிறுவர் கடத்தல் தொடர்பாக பல கருத்துக்கள் வெளிவரும் நிலையில் குறித்த விடயம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

# வவுனியாவில் பாடசாலை மாணவியை அழைத்து சென்ற மர்ம நபர்..!
## வெளியான அதிர்ச்சித் தகவல்..!



வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் தரம் 3 இல் கற்கும் மாணவி ஒருவரை மர்ம நபரொருவர் அழைத்து சென்ற நிலையில், மாணவி தப்பி வந்த போது ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

திங்கள் கிழமை(15) இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

குறித்த பாடசாலையில் பாடசாலை நிறைவடைந்ததும் பெற்றோர் அழைத்து செல்ல தாமதமாகியதால் முன் பகுதியில் உள்ள இருக்கையில் தரம் 3 இல் கற்கும் மாணவி இருந்துள்ளதாகவும் இவ்வேளையில் அங்கு வந்த ஒருவர் மாணவியை அழைத்து சென்றதாகவும் தெரியவருகின்றது.

இந் நிலையில் சிறிது தூரம் சென்ற மாணவி மீண்டும் பாடசாலையை நோக்கி அழுது கொண்டு வந்தபோது அவ்வீதியால் வந்த ஒரு பெண்மணி குறித்த மாணவியை அழைத்து வந்து பாடசாலை ஆசிரியர் ஒருவரிடம் ஒப்படைத்து விட்டு சென்றுள்ளார். இதனையடுத்து பெற்றோர் குறித்த மாணவியை அழைத்து சென்றுள்ளனர்.

இந்நிலையில் நேற்று (16.05) பாடசாலையில் குறித்த மாணவியின் பெற்றோரை அழைத்து பாடசாலை பிரதி அதிபர் உரையாடியதாக தெரியவந்த நிலையில் அவருடன் தொடர்பு கொண்டு குறித்த சம்பவம் தொடர்பில் கேட்டபோது,

இச்சம்பவம் உறுதிப்படுத்தப்படவில்லை என தெரிவித்திருந்தார்.

பெற்றோருடன் நீங்கள் அழைத்து கதைத்தீர்களா என கேட்டபோது, அவர்களுடன் கதைத்திருந்தோம். எனினும் அதனை நாம் சரியாக பார்க்கவில்லை. பிள்ளையின் பாதுகாப்புக்காக பெற்றோருடன் கதைத்தோம் என தெரிவித்தார்.

இந்நிலையில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் அவ்வாறான சம்பவம் தொடர்பில் எவ்வித முறைப்பாடுகளும் பதியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்ட போது இச்சம்பவம் தொடர்பில் அறிந்திருக்கவில்லை எனவும் குறித்த பாடசாலை நிர்வாகத்துடன் கதைப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

# உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவை
## கிழக்கில் பூப்பந்தாட்ட பயிற்சிப்பட்டறை.

உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையின் கிழக்கு மாகாணத்திற்கான பூப்பந்தாட்ட பயிற்சிப்பட்டறை முதல் முறையாக அம்பாறை மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமின் பயிற்றுவிப்பாளராக உலக தமிழர் பூப்பந்தாட்ட பேரவையின் இலங்கைக்கான இணைப்பாளரும் பயிற்றுவிப்பாளருமான அன்ரனி ஜெயகாந்தன் கலந்துகொண்டார் இதில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த வீர வீராங்கனைகள் கலந்து சிறப்பித்தனர்.

இப் பயிற்சி முகாமானது இப் பிரதேசத்திலுள்ள வீர வீராங்கனைகளை ஊக்கப்படுத்தும் செயற்பாடாகவும் திறமைகளை ஊக்கப்படுத்தும் ஒரு பயிற்சி முகாமாகவும் அமைந்திருந்தது.

இப் பயிற்சி முகாமின் போது கனடா நாட்டின் எல்சன் பூப்பந்தாட்டக் கழகமானது வீரர்களுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை வழங்கி உதவியிருந்தார்கள். இந்த கழகமானது வடக்கு கிழக்கு வீரர்களுக்கு வருடந்தோறும் அவ்வாறான உதவிகளை வழங்கி வருவதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு பயிற்சி முகாமினை எதிர்வரும் காலங்களிலும் தொடர்ச்சியாக ஏற்படுத்தி எமது பிரதேசத்திலுள்ள வீரர்களை தேசியரீதியில் வெற்றி பெறச் செய்வதற்கு உறுதுணையாக உலகத் தமிழர் பூப்பந்தாட்ட பேரவை கைகோர்த்து நிற்க வேண்டுமென விளையாட்டு அதிகாரி பத்மநாதன் வசந்த் வேண்டுகோள் விடுத்துள்ளார்.







# இந்தியா பயணமாகின்றது
## ஜனநாயகப் போராளிகள் கட்சி!



இந்தியாவில் இடம்பெறவுள்ள மாநாடு ஒன்றிற்காக ஜனநாயகப் போராளிகள் கட்சியின் குழுவினர் இன்று 17ம் திகதி இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

நாளை 18ம் திகதி இந்தியா புதுடெல்லியில் இடம்பெறவுள்ள பாரம்பரிய மற்றும் கலாச்சார மாநாட்டுக்காக இந்தியாவில் இருந்து வந்த அழைப்பின் பேரில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தேசிய அமைப்பாளரும் ஊடகப் பேச்சாளருமாகன க.துளசி தலைமையிலான குழுவினர் இவ்விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளனர்.

இதன் போது இலங்கையில் தமிழர்களின் பாரம்பரிய கலாச்சார விழுமியங்கள் தற்போதைய காலத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி நடைபெறவுள்ள மாநாட்டில் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "போதைவஸ்த்து பாவனை ஒழிப்பு"
## தொடர்பில் பெண்களுக்கான அறிவூட்டல் நிகழ்வு



சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்ததாக "போதைவஸ்த்து பாவனை ஒழிப்பு" எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது பெண்களுக்கான அறிவூட்டல் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் அவர்களின் அறிவுறுத்தலுக்கமைவாக, சாய்ந்தமருது சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் ஏற்பாட்டில் சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.எம். நஜீம் அவர்களின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது கமு/கமு/அல்-ஹிலால் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் நியாத் ஏ. மஜீத், பிரிவுக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நூருல் நிபா கலந்து கொண்டதுடன் வளவாளராக கல்முனை பிராந்திய பாலியல் ஆரோக்கியம் மற்றும் பாலியல் தொற்று நோய்கள் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.என். முஹம்மது தில்ஷான் கலந்து கொண்டு போதைப் பாவனையால் சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக சொற்பொழிவாற்றினார். இந்நிகழ்வில் சமூக மட்ட அமைப்புக்களின் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்

இதன் மற்றுமொரு அங்கமாக சாய்ந்தமருது - 03, 05 ஆம் பிரிவு பெண்களுக்கான அறிவூட்டல் நிகழ்வு சாய்ந்தமருது கமு/கமு/அல்-கமரூன் வித்தியாலய கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன், பிரிவுக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். நபார் ஆகியோர் கலந்து கொண்டதுடன் வளவாளராக கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் என்.எம். நௌசாத் கலந்து கொண்டு போதைப் பாவனையினால் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக சொற்பொழிவாற்றினார்.

## முள்ளிவாய்க்கால் படுகொலை...

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தை முன்னிட்டு நேற்று, அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வை அடுத்து அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அஞ்சலி நிகழ்வில் முன்னாள் வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் சதீஸ், திருமதி. சிவாஜிலிங்கம் மறறும் சமூக அரசியல் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இங்கு மேலும் உரையாற்றிய எம் கே சிவாஜிலிங்கம் “இலங்கையின் அரச படைகளினாலும், சிங்களக் காடையர் குழுக்களாலும் தமிழ் இனப்படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் பொதுமக்களுக்கு எமது அஞ்சலிகள்.

தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை, போர்க் குற்றங்களுக்கான குற்றவாளிகளைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி எமது மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வோம்.

படுகொலைகள் மீள நிகழாமையை உறுதிப்படுத்தவும் நீதி கிடைக்கவும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் அரசியல் தீர்வைக் காண சுதந்திரத்திற்கான பொதுசன வாக்கெடுப்பு ஒன்றினை நடாத்த வேண்டும்.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தில் வசிக்கும் மக்களும், 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் வாழ்ந்துவரும் புலம்பெயர் மக்கள் உடபட அனைவரும் கலந்துகொள்ளும் வகையில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்” என அவர் தெரிவித்துள்ளார்.

## வட - கிழக்கில் சட்டம் மற்றும்...

ஊடக சந்திப்பில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், கடந்த சில நாட்களாக கொழும்பில் பெருமளவிலான பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அரசாங்கத்துக்கு எதிராம சத்தித்திட்டமொன்று கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படுவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

இந்நிலையில் திருகோணமலையில் அரச உத்தரவையும் மீறி பௌத்த பிக்குகள் புத்த சிலைகளை வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் கொழும்பை பொருத்தவரையில் அரசாங்கத்துக்கு எதிராக சதித்திட்டம் தீட்டப்படுகின்றது என பரவியுள்ள கற்பனை தகவலில் பலத்த பாதுகாக்கு வழங்கப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார்.

## முள்ளிவாய்க்கால் நினைவேந்...

இலங்கைக்கு 1948ல் சுதந்திரம் கிடைத்தது. அந்தச் சுதந்திரம் தமிழர் தேசத்திற்கு,தமிழர் தேசமக்களுக்குக் கிடைக்கவில்லை.

ஐரோப்பியரிடம் போரில் இழந்த சுதந்திரம் தமிழர் தேசத்திற்கும், தமிழ் மக்களுக்கும் திரும்பப் பெறும் உருத்து இலங்கையின் பூர்வீகக் குடிமக்களுக்கு ஆண்டபரம்பரைக்குக் கிடைக்காதநிலையில் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் தேச மக்கள் விடுதலைக்காக ஜனநாயக வழியிலும், ஆயத வழியிலும் போராட்டங்களை நடத்தி வந்தனர்.

கடந்த 70 ஆண்டுகளிலும் பௌத்த சிங்கள ஆட்சியின் மேலாதிக்கம் தமிழர் தேசத்தையும், தமிழ் மக்களையும் பௌத்த சிங்கள மயமாக்கி வருவதும் தமிழர் தேசமும் தமிழ் மக்களும் இன அழிவுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதையும் உலகம் சர்வதேசம் நன்கு அறிந்துள்ளது.

இன்றுவரை பௌத்த சிங்களமயமாக்கப்பட்ட தேசத்தில் தமிழர் போரினாலும், படையெடுப்புக்களினாலும், இனக் கலவரங்களினாலும் குறிப்பாக 2009 காலப்பகுதியில் மே-18 வரை அழிக்கப்பட்டுவரும் நிலையில் எஞ்சிய தமிழ் மக்கள் தங்கள் உயிர்களையும் எஞ்சிய தமிழர் தேசத்தையும் பாதுகாக்கவும் இழந்த சுதந்திரத்தை மீட்கவும் போராடிக் கொண்டு இருக்கிறார்கள்.

மே 18 நினைவேந்தல் நிகழ்ச்சி முள்ளிவாய்க்கால் முற்றத்திலும் உலகில் தமிழர் வாழும் பிரதேசங்களிலும் நடைபெற்று வந்துள்ள நிலையில் இலங்கையிலும் நடைபெற மக்கள் அணிதிரளவுள்ளனர்.

தமிழர் பாரம்பரியத்தில் உயிர் நீர்த்தவர்களுக்கு அஞ்சலி செய்வதுநினைவு கூர்வது அவர்தம் பண்பாடாகும். உயர் நாகரிகமாகும் கடந்தபதினான்கு ஆண்டுகளாக இலங்கையில் முள்ளிவாய்க்கால் முற்றத்திலும், தமிழர் வாழ்விடங்களிலும் இந் நிகழ் வேந்தல் நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன.

தமிழர் பாரம்பரியத்தில் உயிர்களைபலி கொடுத்த, களப் பலியாகியமக்கள் ஆத்மாக்கள் நினைவு கூரப்படுவதும் அந்தமக்களிடத்திலே வாழ்நாளில் இறப்பில்லாது வாழ்ந்து வருவதும் இதயங்களில் நிலைகொண்டுள்ள நம்பிக்கையாகும்.

அந்த ஆத்மாக்கள் வாழும் மக்களிடத்தில் அந்தரித்து நிற்கும் எனும் நம்பிக்கையுடன்தமிழர் கொள்கை இலட்சியத்தைநிலை நாட்டிநிற்கும் என்ற திடசங்கற்பம் தமிழர் தேசமக்களிடம் நிலைகொண்டுள்ளது.

அந்தமக்கள் அனைவரும் மே-18 முள்ளிவாய்க்காலிலும் தாம் வாழும் இடங்களிலும் அணிதிரண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நிறைவு செய்து தமிழர் தேச விடுதலையை அடைவோம் எனும் திடசங்கற்பத்தை நிலைநாட்டிக் கொள்வோம் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.- என்றுள்ளது.

## விளக்கேற்றலோ..! கஞ்சி...

அத்துடன் ”வடக்கு கிழக்கில் உறவுகள் என்ற போர்வையில் புலிப் பயங்கரவாதிகளை ஆண்டுதோறும் ஒரு தரப்பினர் பகிரங்கமாக நினைவேந்தி வருகின்றனர். இதை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் வடக்கு கிழக்கில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில், அது தொடர்பில் தென்னிலங்கை ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு அவர் பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ”அரசு நினைவேந்தல்களுக்கு அனுமதி வழங்குவதால் புலிப் பயங்கரவாதிகளையும் தமிழ்த் தரப்பினர் நினைவேந்தி வருகின்றனர். அத்தகைய நிகழ்வுகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

போரில் இறந்த உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவேந்த வேண்டுமெனில் அவர்கள் தங்களது வீடுகளுக்குள் அதனைச் செய்ய முடியும். அதைவிடுத்து ஊர்திப் பேரணிகள் மூலமும் கஞ்சிகள் வழங்கியும் பொது இடங்களில் விளக்கேற்றியும் வழிபடவேண்டிய அவசியமில்லை.

எதிர்காலத்தில் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக அரசு கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்” எனக் தெரிவித்துள்ளார்.

## முள்ளிவாய்க்கால் நினைவேந்...

சகாதேவன் தெரிவித்தார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே சகாதேவன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்கால் என்பது அரசியல் செய்யும் இடமாக மாறி உள்ளது. 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவர்கள் எங்கிருந்தார்கள் என்றால் உண்மையிலேயே மிகவும் ஒரு ஆச்சரியமான விடயம்.

இவர்கள் இவ்வளவு பேரும் இருந்தார்களா என்று கூடக் கேட்க தோன்றும். உண்மையில் அவர்கள் அனைவரும் தலைமறைவாக இருந்தார்கள்.

2009 ஆம் ஆண்டு இந்த முள்ளிவாய்க்கால் யுத்தம் நடைபெற்ற போது இப்போது இருக்கின்ற தலைவர்கள் எவரும் இந்த யுத்தத்தை நிறுத்த முயற்சி செய்யவில்லை. ஆனால் இப்பொழுது இந்த வாகன ஊர்திகளை கொண்டு திரிகிறார்கள்.

மக்கள் தங்கள் வீடுகளில் இதனை அனுஷ்டிக்க வேண்டும். இந்த முள்ளிவாய்க்காலில் சிரட்டை வியாபார பொருளாகி இருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முள்ளிவாய்க்காலில் மட்டுமல்ல, தமிழர் வாழும் நாடுகள் ஒவ்வொன்றிலும், உணர்வுள்ள தமிழர் கூடும் இடங்கள், வீடுகள் ஒவ்வொன்றிலும் நிகழவேண்டிய நிகழ்வாகும்.

இது சாதி, சமய, மத, இன உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நிகழ்வாக கொண்டாடப்பட வேண்டும்.

முள்ளிவாய்க்கால் நிறைய பாடங்களை நமக்கு கற்றுத் தந்துள்ளது. சிங்கள மக்கள் பாற்சோறு கொண்டாடுவதை விடுத்து இந்த துயர நிகழ்வில் தாங்களும் கலந்து கொள்ள வேண்டும்.

புத்தரின் போதனையில் மிக முக்கிய அத்தியாயமாக உள்ள கர்மா பற்றி ஒவ்வொரு பௌத்த மதத்தவரும் சிந்திக்க வேண்டும். அதன் அடிப்படையில் மே 17 அன்று உணர்வுள்ள தமிழன் ஒவ்வொருவரும் உணவை தவிர்ப்போம்.

மே 18 அன்று உணர்வுள்ள தமிழர் வீடுகள் ஒவ்வொன்றிலும் அறுசுவை உணவை தவிர்ப்போம். அன்றைய தினம் மதியத்திற்குப் பிறகு ஒருவேளைக் கஞ்சியோடு அந்த நாளை நிறைவு செய்வோம். அன்று மாலை விளக்கேற்றி உணர்வோடு ஒன்றி நிற்போம்.

சகல உணவகங்களிலும் உணர்வோடு ஒரு சாதாரண கஞ்சியை இலவசமாக வழங்குவோம். முள்ளிவாய்க்காலில் அரசியல்வாதிகளின் ஒன்று கூடலை முற்றாக நிராகரிப்போம்.

முள்ளிவாய்க்காலில் ஒன்று கூடும் எந்த ஒரு அரசியல்வாதியும், முள்ளிவாய்க்காலில் மக்களின் உணர்வுக்கு தலைமை தாங்கும் எந்த ஒரு அரசியல் தலைவரும், தேர்தல் அரசியலில் இருந்து ஒதுங்கி இருப்பதாக மக்களுக்கு சத்தியம் செய்து தர வேண்டும். அவர்கள் மட்டுமே அந்த மண்ணில் தலைமை தாங்க பொருத்தமானவர்கள்.

முள்ளிவாய்க்கால் எமக்கு கற்றுத் தந்த பாடங்கள் என்ன? நாம் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் என்ன? அதனை அடுத்த தலைமுறைக்கு கடத்துவோம்.

இன மோதலுக்கும். சாதி, சமய, மத வேறுபாட்டிற்கும், வர்க்க, பிரதேச வேறுபாட்டிற்கும் முடிவு கட்டுவோம். உணர்வுகளை அரசியலாக்கும் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்போம்” - என்றார்.

## மரம் கருகி கரிக்கட்டையாக...

இறுதிக்கட்ட யுத்தத்தில் இலங்கை இராணுவத்தால் இரசாயண குண்டுகள் பயன்படுத்தபட்டதாக 14 ஆண்டுகள் கடந்து ஒரு முன்னாள் போராளி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

வவுனியாவில் ஈச்சங்குளம் பகுதியில் வசிக்கும் பாபு கஜேந்தினி(36 வயது) விடுதலைப்புலிகளுக்கு சிகிச்சைகளை வழங்கும் சுகாதார பிரிவில் மருத்துவ போராளியாக கடமையாற்றியுள்ளார்.

இவர் இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் சர்வதேச ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “நான் போராட்ட காலத்தில் நேரடியாக முன் நிக்கவில்லை. ஏனென்றால் நான் ஒரு மருத்துவ போராளி. நான் பின் தளத்தில் தான் நின்றேன். எமக்கு கள அனுபவம் என்பதை விட களத்திற்கு பின்னால் காயப்பட்ட போராளிகளுக்கான மருத்துவ சிகிச்சைகளை செய்து அவர்கள் உயிரை காப்பாற்றிய அனுபவமே இருந்தது.

முதலில் என்னை மாலதி படையணியில் சேர்த்துவிட்டனர். பின்னர் மருத்துவ பிரிவிற்கு சென்று 2008 வரை மருத்துவ போராளியாக பணிபுரிந்தேன். இறுதி யுத்தத்தில் வேறொரு பிரிவுக்கு செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

என் வாழ்வில் இறுதி யுத்தத்தை மறக்கவே முடியாது. ஒரு இடத்தில் போராளிகளும் பொதுமக்களும் ஒன்றாக தான் சேர்ந்து பங்கரில் இருப்போம். சிறு பிள்ளைகளை பங்கருக்குள் அமர்த்திவிட்டு, வெளிப்பகுதியில் நாங்கள் இருப்போம். அங்கு ஒரு குண்டு வீசினால் நாங்கள் அனைவரும் சிதறி போவோம். இப்படி ஒரு சந்தர்ப்பத்தில் முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் 5 ஆம் மாதம் 10 ஆம் திகதி நான் பங்கர் ஒன்றின் வெளிப்புறத்தில் அமர்ந்திருந்தேன்.

இதன்போது இலங்கை இராணுவத்தால் பொஸ்பரஸ் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. அந்த தாக்குதலில் மக்கள் என் கண் முன்னாடியே கருகி இறந்து விழுந்தனர். மரம் கருகி கரிக்கட்டையாக விழுவதைப் போன்று மக்கள் கருகி இறந்து கிடந்தனர். அவர்களை சென்று தொட்டு பார்த்தால் கரிக் கட்டை மட்டும் தான் இருந்தது. வேறு எது வும் இல்லை.

இவ்வாறான பயங்கரமான குண்டு தாக்குதலை நடத்தி தான் இராணுவம் இறுதி யுத்தத்தில் எமது மக்களை அழித்தது.

அந்த பயங்கரத்தை சொல்ல வேண்டுமானால், பொஸ்பரஸ் குண்டு தாக்குதலில் ஏற்பட்ட வெப்பத்தின் காரணமாக எனது கையின் ஒரு பகுதி கருகியது. இப்போதும் உடலின் ஒரு பக்கம் முழுவதும் வெள்ளை சதை தான் உள்ளது.

அந்த குண்டு என்னை நேரடியாக தாக்கவில்லை. அதன் வெப்பம் மட்டும் தான் என்னை தாக்கியது. அப்படியாயின் அந்த குண்டு முழுமையாக ஒருவரை தாக்கும் போது அவர்களின் நிலையை நினைத்து பாருங்கள். அந்த இடம் முழுவதும் ரத்தமும் சதையுமாக இருந்தது. அதில் தான் நாங்கள் நடந்து வந்து வெளியேறினோம். இப்படி வேறு இடத்திற்கு நகர்ந்து செல்லும் போது 2009 ஆம் ஆண்டு 5 மாதம் 16 ஆம் திகதி என்னை காட்டிக் கொடுத்ததால், இராணுவம் என்னை கைது செய்தது.

எனக்கு கடுமையான காயங்கள் காணப்பட்டதால், ஐ.சி.ஆர்.சி என்னை பொறுப்பேற்றது. பின்னர் வவுனியா நீதி மன்றத்தின் ஊடாக நான் விடுதலை செய்யப்பட்டேன்.”என தெரிவித்துள்ளார்.

# அம்பாறை மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் வாரம்!



அம்பாறை மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒன்றியம் மற்றும் பொதுமக்கள் இணைந்து நடாத்தும் மே 18 தமிழர் இன அழிப்பு நாள் முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் வாரத்தின் ஓரங்கமாக நேற்று(16) செவ்வாய்க்கிழமை பேரவல நினைவுப் பதாதைகள் பாண்டிருப்பு தாதன் மண்டப முன்றலில் காட்சிப் படுத்தப்பட்டன.

முன்னதாக கல்முனை பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோவிலில் சிறப்பு பூஜை வழிபாடு இடம் பெற்றது.ஆலய பிரதமபூசகர் அழகக்கோன் சிவரெத்தினம் விசேட பூஜையை நடாத்தினார்.

பின்னர் முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் பதாகைகள் காட்சிப்படுத்தும் நிகழ்வு இடம் பெற்றது. பிரமுகர்களும் பாடசாலை மாணவர்களும் பார்வையிட்டனர்.

நிகழ்வில் முன்னாள் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் முன்னாள் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் தர்சினி பிரமுகர்களான தா.பிரதீபன் பிரபா மற்றும் மகளிரணித் தலைவி நித்யகைலேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தார்கள்.

முள்ளிவாய்க்கால் அனர்த்தம் தொடர்பான பதாகைகள் கட்அவுட்டுகள் வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இன்று (17) புதன்கிழமை இதே இடத்தில், நினைவேந்தல் உரைகள் நிகழ்த்தப்பட்டு கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம் பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# வடக்கு, கிழக்கில் விடுவிக்கப்படாமல் இருக்கும் காணிகள் தொடர்பில் நீதி அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பு



வடக்கு கிழக்கில் இராணுவத்தினர் வசமிருந்த காணிகளில் 90 சதவீதத்துக்கும் அதிகமான காணிகள் அப்பிரதேச மக்களிடம் கையளிக்கப்பட்டுள் ளன. பல்வேறு காரணங்களால் விடுவிக்காமல் உள்ள காணிகளை உரியவர்களுக்கு விரைவாக பெற்றுக் கொடுக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரச திணைக்களத்தின் தென் மற்றும் மத்திய ஆசிய பணியகத்தின் பிரதி உதவி செயலாளர் அப்ரீன் அக்டரிற்கும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ்வுக்கும் இடையிலான சந்திப்பு செவ்வாய்க்கிழமை நீதியமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது பிரதி உதவி செயலாளர் அமைச்சரிடம் வினவிய கேள்விகளுக்கு தெளிவுபடுத்துகையிலேயே இவ்வாறு தெரிவித்ததாக நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் பிரதி உதவி செயலாளர் அமைச்சரிடம் ஆலோசித்திருந்தார்.

அதற்கு அமைச்சர், இந்த சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ள விடயங்கள், அத்துடன் அவற்றை உள்வாங்குவதற்கான தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தாக்கம் செலுத்திய காரணிகள் ஆகியவற்றை இதன்போது தெளிவுபடுத்தியுள்ளார்.

அத்துடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பிலும், இந்த சட்டமூலம் சட்டமாக்கப்பட்டதன் பின்னர் இலங்கையில் அரச மற்றும் தனியார் துறைகளில் ஏற்படும் மோசடிகளை கட்டுப்படுத்துவது தொடர்பிலும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்டத்தை அனுமதிக்கும் போதும் எதிர்க்கட்சியால் தடைகள் வந்த போதும் , அதனை அனுமதிக்கப்பட்ட பின்னர் நாட்டுக்கு தேவையான சட்ட மூலங்களை அனுமதிக்கும்போது அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கிறோம்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் அரசியல்வாதிகள் உட்பட சிவில் தரப்பின் பிரதிநிதிகள் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்துள்ளார்கள்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் வேண்டாம் என்றால் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதா என்ற கருத்தாடல் நாட்டுக்குள் ஏற்பட்டிருக்கிறது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் பிரேரணைகளை சமர்ப்பிக்க அனைவருக்கும் முடியுமான வகையில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதற்போது பிரேரணைகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

மேலும் யுத்தம் நிறைவடைந்த நிலையில் பாதுகாப்பு படைகள் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் பிரதி உதவி செயலாளர் அமைச்சரிடம் வினவியபோது, இராணுவத்தினர் வசமிருந்த காணிகளில் 90சதவீதத்துக்கும் அதிகமான காணிகள் அப்பிரதேச மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. பல்வேறு காரணங்களால் விடுவிக்காமல் உள்ள காணிகளை உரியவர்களுக்கு விரைவாக பெற்றுக்கொடுக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

காணி பிரச்சினை என்பது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல, காணி தொடர்பில் சரியான மதிப்பீட்டை மேற்கொள்ள 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் வனப்பகுதி எத்தனை சதவீதமாக காணப்பட்டது என்பதை ஆராய்வதற்கு காணி அமைச்சு மற்றும் நில அளவை திணைக்களம் ஒன்றிணைந்து காணி அளவை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தென்னாப்பிரிக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் உண்மையை கண்டறிவதற்கான ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதனூடாக நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் நீதி கட்டமைப்பின் அபிவிருத்திக்காக ஐக்கிய அமெரிக்க இராச்சியம் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனம் வழங்கும் ஒத்துழைப்பை வரவேற்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.









கவலை தோய்ந்த முகம்!
கண்ணீர் சிந்தும் பயம்!
குண்டு விழும் தினம்!
கண்டு கொள்ளா உலகம்!

வதைகள் பட்ட சனம்!
விதைகள் ஆன இனம்!
கதைகள் இல்லை நிஜம்!
சதைகள் சிதறும் நிலம்!

முள்ளிவாய்க்கால் அவலம்!
முள்ளுவேலியும் சொல்லும்!
முப்படைகள் கொலைவெறியும்!
முழு உலகமும் அன்று அறியும்!

பதினான்கு ஆண்டுக்கு முன்னம்!
பட்ட துயரம் நெஞ்சில் இன்றும்!
மறக்காது எம்மவர்கள் மனம்!
கிடைக்காதா நீதி என்றும்!

ஐ நாவும் இன்னும் மௌனம்!
ஐயகோ ஆண்ட தமிழினம்!
யாரிடம்தான் இதைச்சொல்வோம்!
ஆண்டவன்தான் இனித்தஞ்சம்!

- அம்பிளாந்துறையூர் அரியம் -

# கிளிநொச்சியில், சிறுவர்களை கடத்த முயன்றவர் அகப்பட்டார்

## விசாரணையில் வெளியான விடயம்!



இலங்கையில் ஆள்கடத்தும் ஒரு கூட்டம் பாடசாலை சிறுவர்கள் சிறுமிகளை கடத்தும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாரதிபுரம் வை எம் சி ஏ வீதியில் பொருட்கள் விற்பனை செய்வதற்காக சென்ற வாகனமே பொதுமக்களால் இவ்வாறு மடக்கி பிடிக்கப்பட்டுள்ளது. இதன்போது குறித்த வாகனத்தில் பயணித்த மூவரும் பொலிசாரிடம் கிராம அமைப்புக்களால் ஒப்படைக்கப்பட்டது.

வெள்ளைவான் புரளியால் வெள்ளை வாகனம் ஒன்று அடித்து நொறுக்கப்பட்டதுடன், சந்தேக நபர்கள் மூவர் காயமடைந்துள்ளனர். குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் 5 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த சந்தேக நபர்கள் மூவரும் தமிழ் மொழியில் பேசாமையால் பிரதேச மக்களிற்கு சந்தேகம் ஏற்பட்டு கிராம அமைப்புக்களை அழைத்து பொலிசாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் அறிந்த பிரதேச மக்களால் இதன்போது அமைதியின்னை ஏற்பட்டது. இதன்போது குறித்த சந்தேக நபர்களை தடுத்து வைக்கப்பட்டிருந்த அறையின் ஜன்னல்கள் உடைக்கப்பட்டது. குறித்த நபர்களை தாக்க முற்பட்டபோது பொது அமைப்புக்கள் தடுத்து நிறுத்தினர்.

தொடர்ந்து சம்பவ இடத்திற்கு கிளிநொச்சி பொலிசார் மூவர் முச்சக்கர வண்டியில் வருகை தந்தனர். இதன்போது குறித்த சந்தேக நபர்களை பொலிசார் விசாரணைக்குட்படுத்தியபோது, தாங்கள் வியாபாரத்திற்காக வந்ததாகவும், தம்மை மக்கள் இவ்வாறு தடுத்துள்ளதாகவும் பொலிசாருக்கு தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளிற்காக அவர்கள் பயன்படுத்திய வாகனத்தில் சந்தேக நபர்களை அழைத்து செல்ல முற்பட்டபோது பிரதேச மக்களால் அமைதியின்மை ஏற்பட்டது. குறித்த வாகனம் தாறுமாறாக உடைக்கப்பட்டது. உள்ளே இருந்த பொருட்களும் வீசி உடைக்கப்பட்டது.

தொடர்ந்து வாகனத்தில் இருந்த சந்தேக நபர்களும் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டனர். பொலிசாரால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பெரும் முயற்சி எடுக்கப்பட்டது. தொடர்ந்து பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் குறித்த சந்தேக நபர்கள் பொலிசாரின் முச்சக்கர வண்டியில் ஏற்றி அழைத்து செல்லப்பட்டனர்.

காயமடைந்த மூவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான பூர்வாங்க விசாரணைகளை கிளிநொச்சி பொலிசார் ஆரம்பித்துள்ளனர்.

# இலங்கை மக்களுக்கு அரசாங்க உதவித் திட்டம்: மனோவுக்கு உலக வங்கியிடமிருந்து உறுதியான தகவல்



“முந்தைய சமுர்த்தி திட்டத்தில் பெருந்தோட்ட மக்களைச் சேர்த்துக் கொள்வதில் குறைபாடு நிலவியதாக நாம் அறிந்துள்ளோம்” ”இது சமுர்த்தி அல்ல. இந்த அஸ்வெசும திட்டம், உலக வங்கி உதவியுடனான நலிவுற்ற மக்களுக்கான மாதாந்த கொடுப்பனவு திட்டமாகும். பெருந்தோட்ட குடும்பங்களுக்கு நியாயமான வாய்ப்புகளை வழங்காமல், இத்திட்டதை நாம் முன்னெடுக்க மாட்டோம்” என்ற உறுதிமொழியை உலக வங்கியின் இலங்கைக்கான நாட்டு-பணிப்பாளர் பாரிஸ் ஹடாட் செர்வோஸ், தன்னை சந்தித்த மனோ கணேசன் எம்பி தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி குழுவிடம் தெரிவிதுள்ளார்.

மனோ கணேசன் எம்பியுடன், தமுகூ நுவரேலியா எம்பி உதயகுமார், கண்டி எம்பி வேலுகுமார் மற்றும் மலையக சிவில் சமூக செயற்பாட்டாளர் கௌதம் பாலசந்திரன் ஆகியோரும் உலக வங்கி குழுவினரை, நேற்றைய தினம் (16.05.2023) கொழும்பில் சந்தித்துள்ளனர்.

உலக வங்கியின் கொழும்பு அலுவலகத்தில் நிகழ்ந்த இந்த சந்திப்பு உரையாடல் தொடர்பில் ஊடகங்களுடன் உரையாடிய மனோ கணேசன் எம்பி கூறியதாவது,

அரசாங்கம் உலக வங்கியின் நிதி உதவியுடன் இலங்கையில் வாழும் வறிய நலிவுற்ற குடும்பங்களுக்கு மாதாந்தம் நிதி கொடுப்பனவு வழங்கும் திட்டத்தை முன்னெடுக்க உள்ளது.

முந்தைய சமுர்த்தி திட்டத்தில் பெருந்தோட்ட மக்களைச் சேர்த்துக் கொள்வதில் குறைபாடு நிலவியதை போல் இந்த திட்டத்தில் பெருந்தோட்ட குடும்பங்களைப் புறந்தள்ள இடன் கொடுக்க மாட்டும் எனத் தமிழ் முற்போக்கு கூட்டணி நாடாளுமன்றத்தில் தெளிவாகக் கூறி விட்டது. இந்த நிலைப்பாட்டை நான் நேரடியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கக்கும் கூறி விட்டேன்.

இது தொடர்பில் நேற்றைய தினம் கொழும்பு உலக வங்கி அலுவலகத்தில், உலக வங்கியின் இலங்கைக்கான நாட்டு-பணிப்பாளர் பாரிஸ் ஹடாட் செர்வோஸ் குழுவினரை, தமுகூ சார்பாக நானும், எம்பிகள் உதயகுமார், வேலுகுமார் மற்றும் மலையக சிவில் செயற்பாட்டாளர் கௌதம் பாலசந்திரன் ஆகியோரும் சந்தித்து தீர்க்கமாகக் கலந்துரையாடினோம்.

நுவரேலியா முதல் கொழும்பு அவிசாவளை வரை பதுளை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, மாத்தளை, காலி, மாத்தறை, குரநாகலை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் வாழும் பெருந்தோட்ட குடும்பங்களுக்கு, இந்த மாதாந்த கொடுப்பனவு திட்டத்தில் இடம்பெற நியாயமான வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

மேலும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் என இதைக் குறுக்கக் கூடாது. தோட்டங்களில் வேலை செய்தாலும், வெளியே வேலை செய்தாலும், செய்யாவிட்டாலும், பெருந்தோட்ட பிரதேசங்களில் வாழும் அனைத்து குடும்பங்களையும் இதில் சேர விண்ணப்பிக்க வாய்ப்பு வேண்டும்.

ஒரு வீட்டில் வசிக்கும், திருமணமான வெவ்வேறு குடும்பங்களையும் வெவ்வேறாகக் கணக்கெடுக்க வேண்டும் எனவும் நாம் கோரினோம்.

மேலும் பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கு இதில் தேவையின்றி தலையிட இடம் கொடுக்க வேண்டாம் எனவும் கூறியுள்ளோம். எமது அனைத்து கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டு, “இது பழைய சமுர்தி திட்டம் அல்ல. இது நாம் நேரடியாகப் பங்கு கொள்ளும் திட்டம். பெருந்தோட்ட குடும்பங்களுக்கு நியாயமான வாய்ப்புகளை வழங்காமல், உலக வங்கி உதவியுடனான நலிவுற்ற மக்களுக்கான இந்த மாதாந்த கொடுப்பனவு இத்திட்டத்தை நாம் எக்காரணம் கொண்டும் முன்னெடுக்க மாட்டோம்” என்ற உறுதிமொழியை உலக வங்கியின் இலங்கைக்கான நாட்டு-பணிப்பாளர் செர்வோஸ், எமக்கு அளித்துள்ளார்.

அடுத்த சில தினங்களில், மேலும் சந்தித்து மேலதிக தகவல்களைப் பரிமாறிக்கொள்ள நாம் பரஸ்பரம் இணங்கியுள்ளோம். இது நமது மக்கள் சார்பாக எமது முயற்சிகளுக்குக் கிடைத்துள்ள சிறப்பான வெற்றியாகும் எனத் தெரிவித்துள்ளார்.

# வெள்ளத்தால் படகில் சென்ற இறுதி ஊர்வலம்..! இலங்கையில் இப்படியும் சம்பவம்



மாத்தறையில் ஏற்பட்ட மோசமான காலநிலையுடன் கூடிய வெள்ளப் பெருக்கு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாத்தறை, கம்புருபிட்டிய, ரஞ்சகொடவில் இடம்பெற்ற இறுதிக் கிரியைகள் மோசமான காலநிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டன.

இதனையடுத்து, கடற்படை, பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகளின் உதவியுடன் இறுதிக் கிரியைகளுக்காக சடலத்தை எடுத்துச் செல்ல படகுகள் பயன்படுத்தப்பட்டன. இதற்கு பேரிடர் மேலாண்மை பிரிவும் ஆதரவு அளித்தது.





# அலட்சிய போக்குடன் செயற்படும் வவுனியா மின்சார சபை- அச்சத்தில் மக்கள்!



கடந்த இரண்டு நாட்களாக மின்சார கம்பிகள் மேல் மரக் கிளைகள் சரிந்து வீழ்ந்துள்ளதனை பாவனையாளர்கள் யாழ் மற்றும் வவுனியா மின்சாரசபை அலுவலகத்திற்கு இரண்டு நாட்களாக முறைப்பாடளித்தும் மின்சார சபை அதிகாரிகளால் எதுவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் வவுனியா சிறீராமபுரம் கிராமத்தின் தொல்காப்பியர் வீதியின் வதிவிட மின் பாவனையாளர்கள் தமது மின் உபகரணங்களை உபயோகிக்காது அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

இக்கிராமத்தில் கடந்த நான்கு நாட்களாக தொடர் மின் தடை ஏற்பட்டிருந்த வேளையும் இ.மி.ச. அதிகாரிகள் பாராமுகமாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர்..! வைத்தியசாலையில் அனுமதி



யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ம.பிர தீபன் நேற்று வல்வெட்டித்துறை, கெருடாவில் பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்கா கினார்.

அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார்.

அவரது உடல்நிலை சீராக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தனர்.